**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 570/2022**

திரு. முனியாண்டி (D.W –1) **25.02.2026**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். எந்த தேதியில் நான் வாதியிடம் கடன் பெற்றேன் என்றால் 2018 இல் கடன் பெற்றேன். கடன் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு தான் வாதியிடம் நான் கடன் பெற்றேன் என்றால் ஆமாம். தாவா கடன் தொகைக்கு வட்டி நூற்றுக்கு ஒரு ரூபாய் என்று வாதி சொல்லி இருந்தார் என்றால் தவறு. மூன்று ரூபாய் என்று செலுத்தும் படி சொன்னார். வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் கடன் தொகைக்கு நூற்றுக்கு ஒரு ரூபாய் வட்டி தான் செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. கடன் தொகைக்கு 2018 ஆம் வருடம் வரை தான் வட்டி செலுத்தி உள்ளேன் என்றால் தவறு. இதுவரை இரண்டு வருடங்களுக்கான வட்டியாக ரூபாய்.14000/– மட்டும் தான் செலுத்தி உள்ளேன் என்றால் தவறு.

2. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2018 முதல் 2022 வரை மாதம் தோறும் வட்டியாக ரூபாய்.10,500/– முதல் ரூ.13,000/– செலுத்தியதாக தாவாவிற்காக தற்சமயம் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2018 ஆம் வருடத்தில் இருந்து தற்சமயம் வரை கடன் தொகைக்கு நான் வாதியிடம் வட்டி எதுவும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. பாதுகாப்பிற்காக கடனுறுதி சீட்டு கொடுக்கப்பட்டதாகவும் அதன் அடிப்படையில் பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக முதல் விசாரணையில் தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கூட்டு சொத்தை அபகரிக்க வேண்டி வாதி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக முதல் விசாரணையில் தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

3.	முதல் விசாரணை வாக்குமூலத்தில திருப்பூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.631/2022 மூன்றாம் நபரை வைத்து திருப்பூர் வாதி தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கிற்கும் வாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்த பிறகு கடன் தொகையோ வட்டியோ செலுத்தவில்லை என்றால் சரியில்ல. 16.6.20025 ஆம் தேதி ரூபாய்.3 லட்சம் யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் என் மகன் மூலம் வாதியிடம் செலுத்தினேன். சாட்சிகள் யாரும் இல்லை நானும் என் மகனும் இருந்தோம். இதன் விவரங்களை எதிர்வழகுரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதி தாவாவில் கூறியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.02.25 16:47:40 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.